***கவனிக்க.-*** *2019.05.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி III, பகுதி II மற்றும் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2124 - 2019 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2019.05.17**

*2124 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி III - காணிகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 116 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2019, யூன் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/58256.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :- சிபிசி/எல்சி/எல்டி/4/1/32/955.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

நுவரெலிய மாவட்டம், நுவரெலிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 535ஈ சந்ததென்ன கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சந்ததென்ன எனும் கிராமத்தில் அமைந்துள்ள நுஎ/ பிராலே/ 2018/ 10 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 25 என காட்டப்பட்டுள்ள 02 றூட் 14.5 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத் திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. குருப்பு முதியன்சலாகே சுமித் ஜயசிரி விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் ஏ, பிரவேசிக்கும் வழி மற்றும் சி. கிராமர் என்பவர் ஆட்சி செய்கின்ற காணி ;
கிழக்கு : சி. கிராமர் என்பவர் ஆட்சி செய்கின்ற காணி மற்றும் தீபதி அமுணுகம என்பவர் ஆட்சி செய்கின்ற காணி ;
தெற்கு : லலிதா பத்மினி மற்றும் ஏனையோர் ஆட்சி செய்யும் காணி மற்றும் காணித்துண்டு இலக்கம் பி (B) ;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் B மற்றும் A.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.03.11 ஆந் திகதி தொடக்கம் ) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- குத்தகை செயற்படுத்தப்படுகின்ற வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப் பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 2% குத்தகை செயற் படுத்தப்படுகின்ற வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியில் 4% வருடாந்த குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாக செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை செய்யப்படும் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனு மதிக்கப்படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகெத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, மே 17.

4-434

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.